அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஆகஸ்ட் - 2025 | மரம் - 4 | கன்று - 8 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-



## ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்.

நீதிமொழிகள் 15:20

ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் எனதன்பு **ஒலிவமரக் கன்றுகள்** இதழின் முதன்மை வாசகர்களான குட்டீஸ்களே! இவ்விதழின் கதைகளைப் படித்து இளையோருக்கு சுவைபட எடுத்துச் சொல்லும் பாட்டி தாத்தாமார்களே! உங்கள் அனைவரையும் இந்த சிறார் இதழின் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வி நிலையங்கள் உங்களுக்கு சரியான, சமமான, தரமான கல்வியை தரும் என்று நம்புகிறேன். நீங்கள் கற்பவைகள் உங்களை தரமுள்ள குடிமக்களாக உருவாக்க இடங்கொடுங்கள். பாடங்கள் தேர்வுக்கானவைகள் மட்டுமல்ல. கிறிஸ்துவானவர் ஞானத்திலும் அறிவிலும் விருத்தியடைந்தது போல நீங்களும் உருவாக்கப்படுவதற்கான தேவனின் உலக வரைபடங்கள் தான் (உயர்)கல்விநிலையங்களும் குடும்ப அமைப்புகளும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

வழியில் இரந்து உண்பவர்களே, உங்களுக்கு இரவு உணவு கிடைக்கும்! முதுமையின் தனிமையில் யாரும் இல்லாமல் பால்கணியில் அமர்ந்து சாலையைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களே, நீங்கள் ஆறுதல் பெறுவீர்கள்! மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் ஏறக்குறைய இயேசுவின் மலைப்பொழிவு தொனியில்தான் இருக்கின்றன. ஏழையர், துயருறுவோர், கனிவுடையோர், தூய்மையான உள்ளத்தோர், இரக்கமுடையோர், அமைதி ஏற்படுத்துவோர், நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர், மக்களால் இகழ்ந்து பேசப்படுவோர் என எண்ணற்ற நபர்கள் அவரைச் சுற்றி இருக்கின்றனர். தன்னைச் சுற்றி நடக்கின்ற நிகழ்வுகளை கண்களால் அவர்களைப் பார்க்கும் இயேசு, கண்களை மூடிக்கொண்டு அவர்களின் பேறுபெற்ற நிலையையும் உணர்ந்து மெச்சுகிறார்.

ஆம், கண்களை மூடும் அனுபவப் பயிற்சியில் எவரும் பேறுபெறும் நிலையைக் கண்டுகொள்வர். ஏனெனில், சரீர கண்களை மூடும்போது தான் நம் ஆன்மாவின் கண்கள் திறக்கின்றன, ஆழ்ந்த மறைபொருள்கள் அங்கே வெளிப்படுகின்றன. இயேசுவின் வார்த்தைகள் வெற்று வார்த்தைகள் அல்ல. மாறாக, அவை இங்கேயே இப்போதே நிகழக்கூடியவை. அவற்றை வாழ்க்கையில் செயல்படுத்திப் பாருங்கள்.

தங்கள் அன்றாட உறவுகளில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, மன்னித்து, ஆறுதல் சொல்லி வாழ்பவர்கள் பகைமை பாராட்டுவதில்லை, வஞ்சகம் நினைப்பதில்லை, வன்மம் வளர்ப்பதில்லை, காத்திருந்து தாக்குவதில்லை. மாறாக, உடனுக்குடன் அமைதியை ஏற்படுத்த விழையும் இவர்கள் கடவுளின் மக்கள். ஏனெனில், தங்களைப் போல மற்றவர்களைப் பார்க்கிறார்கள் இவர்கள். தங்களில் உள்ள தேவனை மற்றவர்களில் காண்கின்றனர். உன்னை போல பிறனையும் நேசி என்பதன் செயல் வடிவம் தான் கண்களை மூடுதல்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**



# வாதுமை

வாதுமைக் கொட்டைகளும் உங்கள் சாக்குகளில் போட்டு, அந்த மனிதனுக்கு காணிக்கையாக கொண்டு போய்க் கொடுங்கள் என யாத்திராகமம் 25:33 பகுதியில் வாசிக்கிறோம். இங்கே குறிப்பிடப்படுவதும் உடலுக்கு புரதச் சத்துக்களை வழங்கும் பாதாம் பருப்புகள் தான். லெபனான், இஸ்ரேல் நாடுகளிலுள்ள குன்றுகளில் முதன்முதலில் மலர்விடும் மரங்களில் ஒன்றுதான் வாதுமை மரம். குளிர்காலம் முடிவதற்கு முன்பே, அதாவது ஜனவரி மாதத்தின் இறுதியில் அல்லது பிப்ரவரி மாதத்தின் ஆரம்பத்திலேயே, அழகிய இளஞ்சிவப்பு அல்லது வெள்ளை நிற மலர்கள் அதில் பூத்து நிற்பதைப் பார்க்கலாம். அதன் எபிரெய பெயரின் நேர்ப்பொருள் ‘‘எழுப்புபவர்.’’

தீர்க்கதரிசி எரேமியா ஊழியம் செய்ய ஆரம்பித்த சமயத்தில், தேவன் வாதுமை மரத்தின் ஒரு கிளையை அவருக்குத் தரிசனத்தில் காட்டி விளக்கினார். வாதுமை மரம் முந்தி ‘எழுந்தது’ போல யெகோவாவும் கீழ்ப்படியாமல்போன தம்முடைய மக்களுக்கு நேரிடப் போகும் ஆபத்துகளைப் பற்றி எச்சரிப்பதற்குத் தம் தீர்க்கதரிசிகளை அனுப்ப அடையாள அர்த்தத்தில் (எரே 7:25) கி.மு. 607-ல், தேவன் குறித்திருந்த சரியான சமயத்தில் விசுவாச துரோக யூதா மக்கள்மீது அவருடைய நியாயத்தீர்ப்பு வந்தது. அது போல, இன்றும் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற தேவன் விழிப்பாய், கவனமாய் இருக்கிறார்.

**பாதாம் எனப்படும் வாதுமைக் கொட்டைகளை** விளைவிக்கும் மரங்களில் பல்வேறு வகை உள்ளன. இந்தியாவில் வளரும் வாதுமை மரங்களின் தாவரவியல் பெயர் இந்தியன் அல்மண்ட் டெர்மினாலியா கட்டப்பா என்பதாகும். இதனை தமிழகத்தில் பாதானி என்றும்,

வாதானி என்றும் அழைக்கிறார்கள். இது வெப்பமண்டலத்தில் வளரும் ஒரு வகை இலையுதிர் மரமாவேன். என் இலைகள் நீண்ட முட்டை வடிவத்தில் இருக்கும்.

வாதுமை கொட்டை பல்வேறு உடல் ஆரோக்கிய நலன்களை கொண்டுள்ளது. வாதுமை மரம் உலகின் பல நாடுகளில் வளர்க்கப்படுகிறது. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் அமெரிக்கா, ஸ்பெயின், ஈரான், மொராக்கோ, சிரியா, துருக்கி, இத்தாலி, ஆஸ்திரேலியா, அல்ஜீரியா, துனியா ஆகியவை வாதுமை கொட்டையை அதிகம் விளைவிக்கும் முதல் பத்து நாடுகள் வரிசையில் இடம்பெற்றுள்ளன. உலகநாடுகளுடன் ஒப்பிடுகையில் வாதுமை மரம் வளர்ப்பது இந்தியாவில் குறைவு.



இந்தியாவுக்கு தேவையான வாதுமை கொட்டை பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது.

நம் நாட்டில், வாதுமை மரம் முக்கியமாக குளிர் பிரதேசங்களின் மலைப் பகுதிகளில் வளர்கிறது, முக்கியமாக ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில்தான் அதிக அளவு வாதுமை மரம் வளர்க்கப்படுகிறது. உத்தரகாண்ட், கேரளா மற்றும் ஆந்திரா, தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் வாதுமை மரம் வளர்க்கப்படுகிறது. இது பார்ப்பதற்கு அழகிய குடை போல் இருப்பதால், அழகுக்காகவும் பெரிய தோட்டங்களிலும், பூங்காக்களிலும் வளர்க்கிறார்கள்.

வாதுமை மரம் சுமார் 25 மீட்டர் உயரம் வரை வளரும். இதன் கிளைகள் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கியது போல் குடை வடிவத்திலிருக்கும். இதன் இலைகள் கரும் பச்சை நிறத்தில் தோன்றி, நாளாக மஞ்சள் நிறத்தில் மாறி, பின் சிவப்பு நிறமாகி உதிர்ந்து விடும். இதன் பழங்கள் சிறியதாக, கூர்மையான முட்டை வடிவத்திலிருக்கும். அதாவது, பச்சை நிறத்தில் காயாக இருந்து, மஞ்சள் நிறத்தில் நார் நிறைந்த ஓட்டின் மீது நல்ல சதை கொண்ட பழமாக மாறி கீழே விழுந்து விடும். விழுந்த பழத்தின் மேலே உள்ள சதைப் பகுதியை உடைத்தால் உள்ளே பருப்பு இருக்கும். இது உண்மையான பாதம் பருப்பின் சுவையை ஒத்ததாக இருக்கும். அதனால் தான் இதனை இந்திய பாதாம் என்று அழைக்கிறார்கள். இதன் சதைகளை பறவைகள் விரும்பி உண்ணும்.

‘குழந்தைகளே, இதன் இலைகள் அடர்த்தியாக சீரான கிளைகளில் பெரியதாக இருப்பதால் நல்ல நிழல் கொடுக்கும். இதன் வேர்கள் நன்றாக மண்ணோடு இறுகி வளரும் தன்மையானது என்பதால் இது மண் அரிப்பையும் தடுக்கும். எனவே இதனை நீங்கள் ஆற்றோரங்களில் வளர்க்கலாம். நீங்கள் வளர்க்கும் மீன் தொட்டிகளில் மீனுக்கு உணவு இல்லையே என்று கவலைப்படுகிறீர்களா? உங்களுக்கு வேண்டாம் அந்தக் கவலை. இதன் காய்ந்த இலைகளை பொடியாக்கி மீன் தொட்டிகளில் போட்டால் குட்டி, சுட்டி மீன்கள் அதை விரும்பி உண்பார்கள். விரைவில் குஞ்சுப் பொரிப்பார்கள். குறிப்பாக ‘பீட்டா’ எனப்படும் ஒரு வகை மீன்கள் வளருவதற்கு இதன் காய்ந்த இலைத் தூள்களை பயன்படுத்துகிறார்கள்.

இலைகளும், பட்டைகளும் சாயம் தயாரிக்கவும் பயன்படுகின்றன. அணியும் ஆடைகளிலும் சாயமேற்ற பயன்படுகின்றன. இதன் இலைகள், பட்டைகள், பழத்தின் சதை, பருப்பு ஆகியவற்றின் மருத்துவ குணங்கள் அதிகமாக இருப்பதால் அவை இன்றும் ஆராய்ச்சியாளர்களால் ஆராயப்பட்டு வருகின்றன. இதன் பழம் மற்றும் இலைகளில்

பாக்டீரியா பூஞ்சைகளை அழிக்கும் சக்தி நிறைய இருக்கிறது. உடம்பில் கரும்புள்ளியிருந்தால் இதன் பருப்பிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்யைத் தேய்த்துப் பார்த்தால் கரும்புள்ளி மறைந்து விடும். இதன் பருப்புகளை உண்டால் வயிற்றுப் போக்கு சரியாகிவிடும், குடல் வியாதிகள் தீரும். மக்கள் இதன் காய்ந்த இலைகளை அரைத்து தேநீரின் சுவையைப் பெற தேயிலைக்குப் பதிலாக பயன்படுத்துகிறார்கள்.

குழந்தைகளே, இதன் காயைக் கல்லால் உடைத்துப் பருப்பை சாப்பிடலாம், சுவையாக இருக்கும். இதன் காயிலிருந்து பருப்பை உடைக்கிறேன் என்று சொல்லி உங்கள் விரல்களை காயப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

---

# நல்ல நண்பன் இயேசு

நாம் நமது குணத்திற்கேற்ற நண்பர்களைத் தெரிந்து கொள்கிறோம். ஒத்த மனம், ஒத்த வயது, ஒத்த சுவை, ஒத்த தொழில், ஒரே இனம் போன்றவற்றின் அடிப்படையில் கூட்டாளிகளை அமைத்துக் கொள்கிறோம். பவுல் நண்பனாகிய தீத்துவைப் பற்றிக் கூறுகிறார். தீத்து ஒரு விசுவாசி பிற இனத்தை சார்ந்தவர். பவுலுடன் மூன்றாம் பிரயாணத்தில் உடன் இருந்தவர், கிரேத்தா தீவின் ஆயர், சபைகள் இவரால் வளர்ச்சி அடைந்தன. மேலும் எல்லாராலும் புகழப்பட்டவர். வழித் துணையானவர், ஊக்கமுள்ளவர், இளைஞன், உடன் ஊழியன் எனக் குறிப்பிடுகிறார்.

நண்பனில்லாத வாழ்வு குறைவுள்ள வாழ்வு. மனித வாழ்வு, வளர்ச்சி, உதவிக்கு நண்பர்கள் தேவை. என் நண்பன் நல்லவனாக இருந்தால், என் வாழ்வும் செயல்களும் நன்றாக இருக்கும். நான் தெரிந்தெடுத்த நண்பன் கெட்டவனாக இருந்தால் என் வாழ்வும் செயல்களும் கெட்டதாக இருக்கும். உன் நண்பனைச் சொல், நான் உன்னைப்பற்றிச் சொல்லுகிறேன் என்பது பழமொழி. நட்பின் மேன்மையை உணர்ந்து தான், ஆகஸ்ட் முதல் ஞாயிற்றுக்கிழமையை ‘‘நண்பர்கள் தினமாக’’ கொண்டாடுகிறோம். பரிசுத்த வேதாகமத்தில் தேவன் ஆதாமோடு, பகலின் குளிர்ச்சியான வேளையில் நண்பனோடு பேசுவது போல உறவாடினார். இஸ்ரவேல் மக்களுக்கு நல்ல நண்பனாயிருந்து விடுவித்து, வழிநடத்தி, போஷித்து, பாதுகாத்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானைக் கொடுத்தார். யோனத்தானும் தாவீதும் உயிரைக் கொடுக்கின்ற அளவுக்கு நேசித்து நல்ல நண்பர்களாயிருந்து சவுலின் கைக்கு தாவீதைத் தப்புவித்தார். இயேசு தன்னுடைய 3½ ஆண்டுப் பணியில் தமது சீடர்களுக்கும், தம்மை தேடி வந்த மக்களுக்கும் சுகம் கொடுத்து, பாவத்தை மன்னித்து, மன அமைதி வழங்கி, நல்ல நண்பனாயிருந்தார். இயேசு சீடர்களை நோக்கி நான் இனி உங்களை வேலைக்காரன் எனச் சொல்லமாட்டேன், நண்பன் என்று அழைக்கிறேன் என்றார் ஒருமுறை. ‘சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்’ (நீதி 17:17) என்ற வசனத்தின்படி, மத்தேயு 26:50-ல் தன்னைக் காட்டிக் கொடுத்த சீடன் யூதாசை நோக்கி ‘சிநேகிதனே, முத்தத்தினாலேயா என்னைக் காட்டிக் கொடுக்கிறாய்’ என்றார்.

நாம் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட நல்ல நண்பர்களை நண்பர்களாக்குவோம். அவர்களோடு இணைந்து தேவனின் மகிமைக்காகப் பணியாற்றுவோம். நமது நண்பர்கள் கிறிஸ்துவின் சிந்தையாகிய ஆத்தும ஆதாயம், சேவை, தியாகம், அன்பு கொண்டவராக இருக்க வேண்டும். முதலில் இயேசுவை நமது நண்பராக்குவோம். இயேசுவே நமது இனிய நண்பர்.

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

எகிப்தை விட்டு வெளியேறிய ஆபிராம் கானான் நாட்டில் வந்து குடியேறினார். அப்போது மீண்டும் தேவன் அவரோடு பேசினார்.

'ஆபிராமே... இதோ நான்கு திசைகளிலும் நீ காணும் தேசத்தையெல்லாம் உனக்கும் உன் சந்ததியினருக்குமாய் கொடுப்பேன்' என்றார்.

ஆபிராம் முதன் முறையாக தேவனின் குரலுக்கு பதில் பேசினார்.

'தேவனே.. என்ன செல்வங்கள் இருந்து என்ன பயன்? எனக்குத் தான் குழந்தைகளே இல்லையே? கணக்கில்லாத செல்வங்கள் ஒரு மழலைக்கு ஈடாக முடியுமா?' ஆபிராம் கேட்டார்.

'கவலைப்படாதே ஆபிராம். உன் சந்ததி கடல் மணலைப்போலவும், வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கணக்கில்லாமல் பெருகும் என்று நான் உனக்குச் சொன்னதை மறந்தாயா?'

'ஆண்டவரே. எனக்கு இன்னும் ஒரு குழந்தை கூட இல்லையே? எப்படி என் சந்ததி கடல் மணல் போல பெருக முடியும்? எனக்குப் பின் என் வீட்டு அடிமைகளின் ஏதாவது ஒரு மகன் தான் என் சொத்துக்களை எடுத்துக் கொள்வான் போலிருக்கிறதே' ஆபிராம் தன் கவலையைச் சொன்னார்.

தேவனோ: 'கலங்காதே.. உன் பிள்ளை தான் உனக்குப் பின் உரிமையாளன் ஆவான். இதோ மீண்டும் உனக்கு அதே வாக்குறுதியைத் தருகிறேன். வானத்தைப் பார், அங்கிருக்கின்ற நட்சத்திரங்களைப் போல உன் வழிமரபினரும் இருப்பார்கள்' என்றார்.

ஆபிராம் ஆண்டவரின் வார்த்தைகளை நம்பினார்.

தேவன் மீண்டும் ஆபிராமை நோக்கி, 'இதோ இந்த நாடும் உனக்குத் தான் சொந்தமாகும் என்றார்.'

'இது எனக்குச் சொந்தமாகும் என்பதை நான் எப்படி அறிந்து கொள்வது?' ஆபிராம் வினவினார்.

தேவன் அவரிடம் 'மூன்று வயதுள்ள ஒரு பசு, மூன்று வயதுள்ள ஒரு செம்மறியாடு, மூன்று வயதுள்ள ஒரு வெள்ளாடு, ஒரு காட்டுப் புறா, ஒரு மாடப்புறா இவற்றைக் கொண்டு வந்து எனக்குப் பலியிடு' என்றார்.

ஆபிராம் தேவன் சொன்ன அனைத்தையும் கொண்டு வந்து அவற்றை இரண்டிரண்டு துண்டுகளாக வெட்டி, ஒவ்வொரு துண்டையும் அதற்கு இணையான பகுதிக்கு எதிரெதிரே வைத்தார். பறவைகளை அவர் வெட்டவில்லை.

இரவில் ஆபிராம் ஆழ்ந்த உறக்கம் கொண்டார். அப்போது தேவன் அவரிடம், 'உன்னுடைய வழிமரபினர் வேறொரு நாட்டிற்கு பிழைக்கச் செல்வார்கள். அங்கே அவர்கள் நானூறு ஆண்டுகள் அடிமைகளாய் இருப்பார்கள். அதன் பின் அவர்கள் ஏராளமான செல்வங்களோடு விடுதலைபெற்றுத் திரும்புவார்கள். நான் உனக்கு நீடிய ஆயுளைக் கொடுப்பேன். உன் முதிர் வயதில் தான் நீ மரணமடைவாய்' என்றார்.

அப்போது நெருப்பு இறங்கி வந்து ஆபிராமின் பலிப்பொருட்களின் இடையே கடந்து போனது. தன்னுடைய பலி தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது என்பதை அறிந்த ஆபிராம் மகிழ்ந்தார்.

ஆபிராம் தேவனுடைய வார்த்தைகளில் உறுதியாய் இருந்தாலும் சாராள் தனக்கு ஒரு வாரிசு இல்லையே என மிகவும் மனம் வருந்தினாள். தன்னால் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியாதோ என்னும் கவலை அவளுக்குள் மெல்ல மெல்ல வளர்ந்து பரவியது. தன்னால் ஆபிராமுக்கும் அவப்பெயரும், மனவருத்தமும் வருகிறதே என்று அவள் மிகவும் கவலைப்பட்டாள். இன்னொரு பெண் மூலமாகவேனும் ஆபிராமுக்கு ஒரு குழந்தை கிடைக்கச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தாள். அவளுக்கு ஆகார் என்னும் எகிப்திய தேசத்துப் பணிப்பெண் ஒருத்தி இருந்தாள். அவள் வழியாக ஆபிராம் குழந்தை பெற்றுக் கொள்ளட்டுமே என்று நினைத்த சாராய் அதுபற்றிக் கணவனிடம் பேச முடிவெடுத்தாள்.



ஒருநாள் அவள் ஆபிராமை அழைத்து, ‘எனக்குத் தான் குழந்தைகள் இல்லை, என்னுடைய கருவறையின் வாசல் தேவனால் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. நீர் என்னுடைய பணிப்பெண் மூலமாக ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும்’ என வேண்டினாள்.

‘என்னது? பணிப்பெண் மூலமாகவா? வேண்டாம். தேவன் நமக்குக் குழந்தைச் செல்வத்தைத் தருவதாக வாக்களித்திருக்கிறார்’ ஆபிராம் மறுத்தார்.

‘நமக்கு வயதாகிறது. நீங்கள் இந்தத் திட்டத்துக்கு ஒத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் நம்முடைய வம்சம் நம்மோடு அழிந்து போய்விடும்’ சாராள் பிடிவாதம் பிடித்தாள்.

‘பணிப்பெண் மூலமாகக் குழந்தை பிறந்தால் அதன் பின் அவள் உன்னை மதிக்க மாட்டாள். உன்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. எனவே நாம் கொஞ்சநாள் காத்திருப்போம்’ ஆபிராம் சொன்னார்.

‘இல்லை. எனக்குத் தேவை உங்கள் குழந்தை. அது எப்படியேனும் கிடைத்தாகவேண்டும். இந்தப் பணிப்பெண் என்னோடு நீண்டகாலமாக இருக்கிறவள். எனவே அவள் எனக்கு எதிராய் இருக்க மாட்டாள். நீங்கள் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவேண்டாம்’ சாராள் தன்னுடைய நிலையில் உறுதியாக இருந்தாள்.

மனைவியின் வற்புறுத்தலை மறுக்க முடியாத ஆபிராம் அந்த வேண்டுகோளை ஏற்றார். தன் வேண்டுதல் நிறைவேறிய மகிழ்ச்சியில் சாராள் தன் பணிப்பெண்ணை தன் கணவனுக்கு மனைவியாகக் கொடுத்தாள்.



ஆபிராம் பணிப்பெண்ணோடு கூடி வாழ்ந்தார். ஆகார் கருவுற்றாள்! ஆபிராமின் முதல் வாரிசு ஆகாரின் வயிற்றில் குடியேறியது.

ஆபிராம் கணித்தது போலவே கருவுற்றதும் ஆகாரின் குணங்கள் மாறத் துவங்கின. அவளுக்குள் அகந்தையும் கர்வமும் நிறைந்தது. அவள் சாராளை நகைக்கவும், ஏளனமாய் பேசவும் துவங்கினாள்.

‘குழந்தைப் பேறு இல்லாதவர்கள் எல்லாம் தேவனால் சபிக்கப்பட்டவர்கள்.’



‘உன்னால் இத்தனை ஆண்டுகள் முயன்றும் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியவில்லையே. என்னைப் பார் உடனடியாக தாயாகிவிட்டேன்.’

‘தாய்மைப் பேறு இல்லாமல் வாழ்ந்து என்ன பயன்?’

ஆகார் சாராயின் மீது ஏளனச் சொற்களை எறிந்து மகிழ்ந்தாள்.

குழந்தைப் பேறு இல்லாத சாராளுக்கு ஆகாரின் ஏளனப் பேச்சு அதிக துன்பத்தைத் தந்தது.

‘நீ என்னுடைய பணிப்பெண் தான். நான் சொல்வதைச் செய்வது தான் உன் வேலை. குழந்தை பெற்றுக்கொள்வது என்பது நான் உனக்குத் தந்த வேலை அவ்வளவு தான். இனிமேல் உன் வாயிலிருந்து ஒரு ஏளனச் சொல் விழுந்தால் அவ்வளவுதான்’ சாராய் எச்சரித்தாள்.

அதோடு விட்டுவிடாமல் கருவுற்றிருந்த ஆகாரை கடினமான வேலைகள் செய்யவைத்து பழிவாங்கினாள் சாராய். ஆபிராமோ எதையும் கண்டுகொள்ளாமல் இருந்தார்.



சாராயின் கொடுமை அதிகரித்து தாங்கமுடியாத நிலையை அடைந்தபோது ஆகார் வீட்டை விட்டு தப்பி ஓடினாள். ஓடி ஓடி கால்கள் தளர்ந்து பாலைவனத்தில் நம்பிக்கையற்று வீழ்ந்த போது, ஒரு தேவதூதன் அவளைச் சந்தித்து அருகிலிருந்த நீரூற்றுக்கு அழைத்துச் சென்றான்.

‘நீ சாராயின் பணிப்பெண்ணான ஆகார் அல்லவா? எங்கே ஓடுகிறாய்?’ தூதர் கேட்டார்.

‘ஐயா... சாராய்க்கு குழந்தைகள் இல்லை. எனவே நான் சாராயின் விருப்பப்படி ஆபிராம் மூலமாகக் கருவுற்றேன். கருவுற்றபின் சாராயின் மனது மாறிவிட்டது. அவள் என்னை எதிரியாய் பாவித்துக் கொடுமைப்படுத்துகிறாள். அதையெல்லாம் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை எனவே தப்பி ஓடுகிறேன்’ ஆகார் சொன்னாள்.

‘நீ உன்னுடைய எஜமானியின் மனம் புண்படுமாறு நடந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்’ தூதன் சொல்ல, ஆகார் மௌனமானாள்.



தூதன் அவளிடம், ‘நீ இந்தப் பாலை நிலத்தில் அலையவேண்டாம். பேசாமல் சாராயிடமே போ. அவளைப் புண்படுத்தாமல் அவளுக்குப் பணிந்திரு. அது தான் நல்லது’ என்றார்.

‘இனிமேல் நான் அங்கே போனால் என்னால் அமைதியாக வாழமுடியுமா?’ ஆகார் பயந்தாள்.

தொடரும்...

# எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்?




**ஆதியாகமம் 15,16ஆம் அதிகாரங்களைப் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. கர்த்தர் ஆபிரகாமை எந்த பட்டணத்திலிருந்து அழைத்து வந்தார்?
2. ஆபிராமின் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருந்தது யார்?
3. நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்று ஆபிராமின் தரிசனத்திலே பேசியது யார்?
4. கர்த்தர் ஆபிராமுக்கு வானத்தில் எவைகளைக் காண்பித்து, உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்?
5. ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்திலே எத்தனை வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்று கர்த்தர் கூறினார்.
6. ஆகார் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, யாரை அற்பமாக எண்ணினாள்?
7. தன் நாச்சியாராகிய சாராயைவிட்டு ஓடிப்போனது யார்?
8. சாராயின் அடிமைப்பெண்ணின் பெயர் என்ன?
9. கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை எந்த இடத்தில் இருக்கிற நீரூற்றண்டையில் கண்டார்?
10. நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல ........................................ அடக்கம்பண்ணப்படுவாய்.

விடைகள் 13ஆம் பக்கம் பார்க்கவும்

# வெட்டுக்கிளி

வெட்டுக்கிளியின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# வெட்டுக்கிளி

வெட்டுக்கிளி ஒரு சத்துவமற்ற ஐந்துவாயிருந்தும், வேதத்தில் அநேக இடங்களில் இதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய கோபம் இறங்கி வரும்போது, தேவன் இந்த வெட்டுக்கிளிகளை அனுப்பி, மனிதன் தன் உணவிற்கென்று பயிரிட்டிருக்கும் பயிர்வகைகளை ஒட்டு மொத்தமாக தின்று மேய்ந்து போடும்படி அனுப்புகிறார். பார்வோனுக்கு முன்பாக தேவன் இந்த வெட்டுக்கிளிகளை சாபமாக அனுப்பி, பயிர்களை அழிக்கும்படி செய்தார் (யாத். 10:13-15). வெளிப்படுத்தின விசேஷத்திலும் 9ம் அதிகாரத்தில் 1-11 வரை உள்ள வசனங்களில், தேவ கோபம் இறங்கி வரும்போது, இந்த வெட்டுக்கிளிகளை சாபமாக, பயிர்களை அழிக்கும்படி அனுப்பப்படாமல், மனிதர்களை துன்பப்படுத்தும்படி வருகின்றன. நீதிமொழிகளில் ராஜா இல்லாதவைகளாய் இருக்கிற இந்த வெட்டுக்கிளிகளுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு இராஜா உண்டு. அவன் பாதாளத்தின் தூதன் என்று வேதம் கூறுகிறது. நாம் இந்த வெட்டுக்கிளிகள் துன்பப்படுத்தும்படி அனுப்பப்படும் காலத்திற்குள் கடந்து செல்லாதபடி, இந்த கிருபையின் காலத்திலேயே கர்த்தரை ஏற்றுக்கொண்டு, கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தி கொள்ள வேண்டும். ‘மேலும் அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்துமாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது; அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப்போலிருக்கும். அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத்தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்’ (வெளி. 9:5-6). என்ன ஒரு பயங்கரமான நிலைமை பாருங்கள்! வேதனை மிகவும் அதிகமாய் இருப்பதால் சாவு வேண்டும் என்று விரும்பினாலும் அது அவர்களை விட்டு ஓடிப்போய் விடும், சாகவும் முடியாது, வாழவும் முடியாது. இதற்கு நாம் எப்படியாகிலும் தப்பித்தே ஆக வேண்டும்.

நாமும் தேவ கோபம் வெட்டுக்கிளிகள் வடிவத்தில் வருமுன் நம்மை தேவனுடைய வருகைக்கு ஆயத்தப்படுத்த ஞானமாய் வாழ தேவன் தாமே நமக்கு கிருபை செய்வாராக! இந்த மாதம் ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற ஞானமுள்ள வெட்டுக்கிளியைக் குறித்து பார்க்கலாம்.

## வெட்டுக்கிளி

(Caelifera) கணுக்காலி தொகுதியைச் சேர்ந்த ஒரு பூச்சியினம் ஆகும். உலகில் எண்ணற்ற எண்ணிக்கையில் வெட்டுக்கிளிகள் உள்ளன. சுமார், 11,000 வகையான வெட்டுக் கிளிகள் உள்ளன.



வெட்டுக்கிளிகள் பொதுவாக பாலைவனங்கள், காடுகள், புதர்கள், விவசாய நிலங்கள், வெப்பமண்டல காடுகள் அல்லது சவன்னா புல்வெளிகள் போன்ற திறந்த

நிலங்களில் காணப்படுகின்றன. பல்வேறு இடங்களுக்கு ஏற்ப, பல்வேறு வகையான வெட்டுக்கிளிகள் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றன. வெட்டுக்கிளிகள் பொதுவாக தாவர உணவுகள் அதிகம் உள்ள பகுதிகள் மற்றும் மித வெப்பமான சூழல் இருக்கும் பகுதிகளில் வாழ்கின்றன. பொதுவாக, வெட்டுக்கிளிகள் தனித்துப் வாழ்கின்றன. அவை உணவுக்காக நாடு முழுவதும் இடம்பெயர்கின்றன. வெட்டுக்கிளி நீண்ட தூரம் பறக்கும் மற்றும் அதிக உயரத்தில் குதிக்கும் திறன் கொண்ட ஒரு பூச்சி.

அமெரிக்க வெட்டுக்கிளி, குதிரைத்தலை வெட்டுக்கிளி, பாலைவன வெட்டுக்கிளி, இலை வெட்டுக்கிளி ஆகியன வெட்டுக்கிளியின் சில இனங்களாகும். வெட்டுக்கிளியின் நிறம் பொதுவாக பச்சை, பழுப்பு அல்லது சாம்பல் நிறத்தில் இருக்கும். நீண்ட கொம்பு வெட்டுக்கிளி, குட்டைக் கொம்பு வெட்டுக்கிளி என வெட்டுக்கிளிகள் 2 வகைப்படும்.

ஒரு வெட்டுக்கிளியின் எடை இனத்தைப் பொறுத்து மாறுபடும், ஆனால் ஒரு வயது வந்த வெட்டுக்கிளி சராசரியாக 300 மில்லிகிராம் எடையுள்ளதாக இருக்கும். வெட்டுக்கிளி 1.3 மில்லிமீட்டர் முதல் 15 சென்டிமீட்டர் நீளம் கொண்டது.

தலை, மார்பு மற்றும் வயிறு ஆகியவை பூச்சிகளின் அடிப்படை உடலை உருவாக்குகின்றன. வெட்டுக்கிளிகள் 360 டிகிரி பார்வையை வழங்கும் கூட்டுக் கண்களைக் கொண்டுள்ளன.

தொடுதல் மற்றும் வாசனை ஒரு ஜோடி ஆண்டெனாக்களால் உணரப்படுகிறது. அவை ஒன்றுடன் ஒன்று இணைந்த தட்டுகளைக் கொண்ட கடினமான புறத்தோலைக் கொண்டுள்ளன, அதே போல் பிரிக்கப்பட்ட வயிறு மற்றும் மார்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

அவற்றுக்கு மூன்று ஜோடி கால்களும் இரண்டு ஜோடி இறக்கைகளும் உள்ளன. வெட்டுக்கிளியின் வயிறு பதினொரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வெட்டுக்கிளிக்குக் கணுக்களாகப் பிரிவுபட்ட மூன்று இணைக் கால்கள் இருக்கின்றன. இவற்றில் பின் இணைக் கால்கள் பிற கால்களை விட நன்கு வளர்ச்சியுடையதாக இருக்கின்றன. இந்தக் கால்கள் நீண்ட, வலிய கால்கள். இவற்றின் உதவியுடன் தரையிலிருந்து எம்பிக் குதித்து நெடுந்தூரம் தாவிக் குதிக்கிறது. வெட்டுக்கிளியின் குறுகிய, விறைப்பான சிறகு மூடிகளுக்குள் விசிறி வடிவாக மடிக்கப்பட்ட அகன்ற சிறகுகள் இருக்கின்றன. முதிர்ச்சியடைந்த பூச்சிகள் நன்றாகப் பறக்கின்றன.

ஒரு வெட்டுக்கிளி தரையில் இருந்து மிக உயரமாக குதிக்க முடியும். அளவு சிறியதாக இருந்தாலும், வெட்டுக்கிளிகள் தரையில் இருந்து 1 முதல் 1.5 மீ உயரம் வரை குதிக்கும் திறன் கொண்டவை.

பாலைவன வெட்டுக்கிளி என்பது வெட்டுக்கிளியின் ஒரு வகையாகும். உலகில் அதிக அழிவை ஏற்படுத்தக்கூடிய இடம்பெயரும் பூச்சிகளில் இவையும் ஒன்றாகும். பயிர்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் உள்ளிட்ட எந்த வகையான பச்சைத் தாவரங்களையும் பெரிய அளவில் இவை உண்ணக்கூடியவை. ஒரு பொதுவான வெட்டுக்கிளி திரளானது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 15 கோடி வெட்டுக்கிளிகளைக் கொண்டிருக்கும். இவற்றால் ஒரு நாளைக்கு 150 கிலோமீட்டர் பயணம் செய்ய முடியும். ஒரு சதுர கிலோமீட்டர் போன்ற ஒரு சிறிய பரப்பளவில் உள்ள வெட்டுக்கிளி திரளால் கூட 35,000 மக்கள் ஒருநாளைக்குச் உண்ணக்கூடிய அளவு பச்சைத் தாவரங்களை உண்ண முடியும்.

இவை ஒரு நாளைக்குத் தங்கள் உடல் எடைக்குச் (2 கிராம்) சமமான பச்சைத் தாவரங்களை உண்கின்றன. இலைகள், தளிர்கள், மலர்கள், பழம், விதைகள், தண்டுகள் மற்றும் பட்டை எனப் பலவிதமான உணவை உண்ணக்கூடியவை. கம்பு, மக்காச்சோளம்,

சோளம், வாற்கோதுமை, நெல், மேய்ச்சல் நிலப்புறக்கள், கரும்பு, பருத்தி, பழ மரங்கள், பேரீச்சை, வாழை தாவரங்கள், காய்கறிகள் மற்றும் களைகள் என கிட்டத்தட்ட அனைத்து பயிர்கள் மற்றும் பயிரல்லாத தாவரங்களையும் உண்கின்றன. வேளாண்மை செய்யப்படும் பயிர்ச் செடிகளுக்குக் சேதம் விளைவிப்பதால் இது உழவர்களின் எதிரி என்று அறியப்படுகிறது.

சீனாவின் உணவுச் சந்தை, இந்தோனேசியா, ஜப்பான் மற்றும் பல நாடுகள் உட்பட பல நாடுகளில் வெட்டுக்கிளி உணவாக உட்கொள்ளப்படுகிறது. 'சைபோர்க் வெட்டுக்கிளிகள்' வாஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரால் உருவாக்கப்பட்டன. வெடிபொருட்களைக் கண்டுபிடிக்க ஏழு வெட்டுக்கிளிகள் பயன்படுத்தப்பட்டன, அவை 80 சதவீதம் துல்லியமானவை என்று கண்டறியப்பட்டது. அவை சுதந்திரம், ஆன்மீகம் மற்றும் ஞானம் போன்றவற்றின் அடையாளமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உலகின் சில நாடுகளில் வெட்டுக்கிளிகள் புரதச்சத்து நிறைந்திருப்பதால் உணவாக உட்கொள்ளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மெக்சிகோவில் இவை உண்ணப்படுகின்றன. ஒரு வெட்டுக்கிளி வேட்டையாடப்படாவிட்டால் ஒரு வருடம் வரை வாழ்கிறது. 50% வெட்டுக்கிளிகள் முன்கூட்டியே இறக்கின்றன. அதாவது பறவைகள், பல்லிகள் மற்றும் பிற விலங்குகள் போன்றவற்றால் வேட்டையாடப்படுகின்றன.

27 ஆண்டுகளுக்குப் பின்னர், 2019-இல் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்ட பாலைவன வெட்டுக்கிளிகள் ஈரான், இந்தியாவுக்குள் வந்த திரளானது ஈரான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து வந்தது. குஜராத் மற்றும் இராஜஸ்தானில் இவற்றின் பரவல் கடந்த ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கியது. டிசம்பர் மாதத்தில் குஜராத்தில் 17,000 எக்டேர் பரப்பளவில் இருந்த, பெரும்பாலும் சீரகப் பயிர்கள் சேதம் அடைந்தன. மேற்கு இராஜஸ்தானின் பகுதிகளில் குறைந்தது 3,50,000 எக்டேர் பரப்பளவில் இருந்த பயிர்கள் இவற்றால் அழிக்கப்பட்டன. மே மாதத்தில் இராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வெட்டுக்கிளி திரள்களால் மோசமாக பாதிப்படைந்தன. இத்திரள்கள் ஒரு கிலோ மீட்டர் அகலம் உடையதாக இருந்தன. இது கடந்த 27 ஆண்டுகளில் நடந்த வெட்டுக்கிளித் தாக்குதல்களில் மிக மோசமானதாகும்.

வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு இவ்வுலகத்துக்குப் புதியதல்ல. எகிப்தியர்களிடமிருந்த இஸ்ரவேலர்களைக் காக்க எகிப்தியர்களின் நிலத்தின்மீது தேவன் வெட்டுக்கிளிகளை ஏவியதான குறிப்புகள் பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். அக்காலத்திலேயே வெட்டுக்கிளிகள் ஒரு அச்சுறுத்தும் சக்தியாகவே இருந்திருக்கின்றன. எனினும் இன்றைய அதிகரிக்கும் புவி வெப்பமும் காலநிலை மாற்றமும் இந்த அழிவு சக்திக்கு இன்னும் அதிக சாதகமாக இருப்பதை அறிவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.


**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

9ஆம் பக்கத்தின் விடைகள்

## எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய் - பதில்கள்

1. ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணம், 2. தமஸ்கு ஊரானாகிய எலியேசர்,
3. கர்த்தர், 4. நட்சத்திரங்களை, 5. நானூறு வருஷம், 6. சாராயை,
7. சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகார், 8. ஆகார்,
9. வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகே, 10. முதிர்வயதிலே


தாவரங்கள் இருக்கும் பகுதிக்குச் செல்வதற்கு வெட்டுக்கிளிக்கு சரியான வழிகாட்டுங்களேன்.




# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.
ரோமர் 4:20-21




சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள். ஏசாயா 61:3




ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். எபேசியர் 2:10




உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்;
ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். யாக்கோபு 5:13

# வேதமே வெளிச்சம்


நீதிமானுடைய சிரசின்மேல்
ஆசீர்வாதங்கள் தங்கும்.
நீதிமானுடைய பேர்
புகழ்பெற்று விளங்கும்.
நீதிமொழிகள் 10:6,7
God bless you


நீதிமானுடைய வாய் ஞானத்தை
வெளிப்படுத்தும்.
நீதிமான்களுடைய உதடுகள்
பிரியமானவைகளைப் பேச அறியும்.
நீதிமொழிகள் 10:31,32
God bless you


என் தேவன் தம்முடைய
ஐசுவரியத்தின்படி உங்கள்
குறைவையெல்லாங் கிறிஸ்து
இயேசுவுக்குள் மகிமையிலே
நிறைவாக்குவார்.
பிலிப்பியர் 4:19
God bless you


என்னைப் பெலப்படுத்துகிற
கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையுஞ்செய்ய
எனக்குப் பெலனுண்டு.
பிலிப்பியர் 4:13
God bless you

# எனக்குப் பின்சென்று வா!

நீங்கள் எப்போதாவது மிகவும் தனிமையாக உணர்ந்திருக்கிறீர்களா? யாரும் உங்களைப் பற்றி கவலைப்படுவதில்லை என்பது போல? உங்களுக்கு நண்பர்கள் இல்லை என்பது போல? இயேசுவைச் சந்திக்கும் வரை மத்தேயு (லேவி) அப்படித்தான் உணர்ந்தார். பின்னர் எல்லாம் மாறியது. அது இப்படித்தான் நடந்திருக்கலாம்...

ரோமானியர்கள் யூதேயாவைக் கைப்பற்றியபோது, அனைத்து யூதர்களும் வரி செலுத்த வேண்டும் என்று கோரினர். யாரும் பணத்தைக் கொடுக்க விரும்புவதில்லை. குறிப்பாக ஆக்கிரமிப்புப் படைக்கு. பெரும்பாலான மக்கள் அதைப் பற்றி கோபமடைந்தனர். வரி செலுத்துவதைத் தவிர்ப்பதற்கான வழிகளைப் பற்றி பலர் யோசிக்க முயன்றனர். வரி வசூலிக்க உதவுவதற்காக ரோமானியர்கள் யூதர்களை வேலைக்கு அமர்த்தினர். அப்படித்தான் மத்தேயுவுக்கு வரி வசூலிப்பவராக வேலை கிடைத்தது. மக்கள் பணம் செலுத்துவதை உறுதி செய்வதே அவரது வேலை.

விரைவில் அவரது பழைய நண்பர்கள் பலர் அவருடன் பேசுவதை நிறுத்தினர். ரோமானியர்களும் அவரை உண்மையில் விரும்பவில்லை. அவர்கள் அவரை ஒரு வேலைக்காரனைப் போல நடத்தினர், பொதுவாக அவரைப் புறக்கணித்தனர். அவர்களுக்குத் தேவையானது அவர்களின் பணம் மட்டுமே. பொதுவாக, அவருடன் பேசும் ஒரே மக்கள் மற்ற வரி வசூலிப்பவர்கள் மட்டுமே.

வரி வசூலிப்பவர்கள் அனைவரும் பொய்யர்கள், ஏமாற்றுபவர்கள் மற்றும் திருடர்கள் என்று மக்கள் சொல்வார்கள். ஆனால் நல்ல வரி வசூலிப்பவர்களும் கெட்டவர்களும் இருந்தனர். ரோமர்கள் வரி வசூலிப்பதற்காக அவர்களுக்கு பணம் கொடுக்கவில்லை. வரி வசூலிப்பவர்கள் மக்களிடம் கொஞ்சம் அதிகமாக வசூலிப்பார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்கள் வசூலிக்கும் கூடுதல் பணம் அவர்களுடையது. எனவே பெரும்பாலான வரி வசூலிப்பவர்கள் மக்களிடம் அதிகமாக வரி வசூலித்தனர்.



சில காலமாக மத்தேயு இயேசு என்ற ஒருவரைப் பற்றி கேள்விப்பட்டிருந்தார். மக்கள் அவரிடம் பேசாவிட்டாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் பேசினார்கள். அவர்கள் பணம் செலுத்தக் காத்திருந்தபோது, மத்தேயு அவர்கள் பேசுவதைக் கேட்டார். நகரத்தில் என்ன நடக்கிறது என்பதை அவர் அப்படித்தான் அறிந்துகொண்டார்.

இயேசு அற்புதமாகப் பேசினார். நடக்கவோ பார்க்கவோ முடியாத மக்களை அவர் குணப்படுத்தினார். மத்தேயு சில சமயங்களில் அவர்கள் வேடிக்கைக்காக ஓடுவதையும் குதிப்பதையும் பார்த்தார். இயேசு பாவங்களை மன்னித்தார் என்று மக்கள் சொன்னார்கள். மத்தேயு அதைப் பற்றி யோசித்தார். அவர் தவறுகளைச் செய்தார் என்பது அவருக்குத் தெரியும். இயேசு தனது பாவங்களை மன்னிக்க முடியுமா? இயேசு அவரிடம் பேச விரும்புவாரா?



பின்னர் ஒரு நாள் அற்புதமான ஒன்று நடந்தது.

இயேசு மத்தேயுவின் முன் நின்று கொண்டிருந்தார். அவரிடம் பேசிக் கொண்டிருந்தார். இயேசு, ‘‘மத்தேயு! வா! என்னைப் பின்பற்று!’’ என்றார்.

மத்தேயு தயங்கவில்லை. அவர் எழுந்து, எல்லாவற்றையும் மற்ற வரி வசூலிப்பவர்களிடம் விட்டுவிட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்தார்.

மத்தேயு இயேசுவைப் பின்பற்றி, அவருடைய சீடர்களில் ஒருவராக இருக்க முடிவு செய்தார். மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். எனவே அவர் தனது நண்பர்கள் அனைவருக்கும் ஒரு பெரிய விருந்து வைத்தார். அவர்களும் இயேசுவை சந்திக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

என்ன நடக்கிறது என்பதைக் காண வேதபாரகரும் பரிசேயரும் வந்தார்கள். இயேசு மத்தேயுவின் விருந்தினராக இருப்பதைக் கண்டார்கள். அவர் வரி வசூலிப்பவர்களுடன் சாப்பிடுவதைக் கண்டார்கள். அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்!

‘‘இயேசு!’’ என்று கூப்பிட்டு ‘‘ஏன் வரி வசூலிப்பவர்களுடனும் பாவிகளுடனும் சாப்பிடுகிறாய்?’’ என்று கேட்டார்கள்.

இயேசு மேலே பார்த்து புன்னகைத்தார். ‘‘ஆரோக்கியமாக இருப்பவர்களுக்கு மருத்துவர் தேவையில்லை,’’ என்று அவர் கூறினார். ‘‘நோயாளிகளுக்கு மட்டுமே மருத்துவர் தேவை. நீதிமான்களை மனந்திரும்பச் சொல்ல நான் வரவில்லை. பாவிகளை மனந்திரும்ப உதவ நான் வந்திருக்கிறேன்’’ என்றார்.

இயேசுவின் பதில் அனைவருக்கும் நம்பிக்கை அளித்தது. ஆண்டவரின் குடும்பத்தில் யாரும் விடுபடக்கூடாது. அனைவரும் சேரலாம். ஆண்டவர் அனைவரையும் தனது குடும்பத்தில் சேர அழைக்கிறார்.

உங்களைப் பற்றி என்ன? நீங்கள் இயேசுவின் குடும்பத்தில் சேர்ந்தீர்களா?

**மனப்பாட வசனம்:**

நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்.

(மத்தேயு 9:13)

## "ஆயத்துறை லேவி" தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: லூக்கா 5:27-32)

ஆயத்துறை
ஆயக்காரன்
லேவி
விருந்து
வேதபாரகர்
பரிசேயர்
பாவி
போஜனபானம்



பிணியாளி
இயேசு
வைத்தியன்
நீதிமான்
மனந்திரும்பு
சீஷர்
பந்தி
முறுமுறுத்தல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | றை | பா | வி | த் | நீ | தி | மா | ன் | மு |
| ம | போ | ஜ | ன | பா | ன | ம் | லே | ஆ | று |
| ன | பி | இ | யே | சு | ன் | ப | வி | ய | மு |
| ந் | த | ளி | சீ | ஷ | ர் | ந் | வே | க் | று |
| தி | வை | த் | தி | ய | ன் | தி | ன | கா | த் |
| ரு | ய | வி | ரு | ந் | து | கா | பி | ர | த |
| ம் | வே | த | பா | ர | க | ர் | ணி | ன் | ல் |
| பு | ஆ | ஆ | ய | த் | து | றை | யா | வி | பி |
| க | ப | ரி | சே | ய | ன | ர் | ளி | ரு | மா |



# பரமண்டல ஜெபம்

(மத்தேயு 6:9-13)



## விடுபட்ட வார்த்தைகளை நிரப்புக

நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது:

.................................. எங்கள் பிதாவே,

உம்முடைய .......................... பரிசுத்தப்படுவதாக;

உம்முடைய .......................... வருவதாக;

உம்முடைய .......................... பரமண்டலத்திலே

செய்யப்படுகிறதுபோல ........................ செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ......................................

இன்று எங்களுக்குத் தாரும்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல

எங்கள் .......................... எங்களுக்கு மன்னியும்.

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,

............................... எங்களை .........................................

ராஜ்யமும், வல்லமையும், ..................................

என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

| | |
|---|---|
| நாமம் | மகிமையும் |
| பரமண்டலங்களிலிருக்கிற | தீமையினின்று |
| கடன்களை | ஆகாரத்தை |
| ராஜ்யம் | இரட்சித்துக்கொள்ளும், |
| பூமியிலேயும் | சித்தம் |

# பரமண்டல ஜெபம்

கீழ்க்காணும் படங்களுக்கு தகுந்த வண்ணம் தீட்டி மகிழுங்கள்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.



உம்முடைய ராஜ்யம் வருவதாக.



உம்முடைய சித்தம் நிறைவேறுவதாக.



உம் சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது
போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.



எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை
இன்று எங்களுக்குத் தாரும்.



எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது
போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.



எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,
தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்



ராஜ்யமும், வல்லமையும், மகிமையும்
என்றென்றைக்கும் உம்முடையவைகளே



# ஆண்டவரே நீர் யார்?

சவுல். கிறிஸ்தவத்துக்கு எதிராக மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருந்தவர். சிசிலியா நாட்டின் தர்சு பட்டணத்தில் பிறந்த பரிசேயர். மிகவும் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்த இவர் யூத மத சட்டங்களை நன்கு கற்றறிந்தவர். கிறிஸ்தவத்துக்கு சிம்ம சொப்பனமாய் இருந்தார்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவரையும் வீடுகளில் புகுந்து கொடுமைப்படுத்தினார். தன்னுடைய வலிமையினால் அவர்களை இழுத்துக் கொண்டு போய் சிறையிலும் அடைத்தார். வளர்ந்து கொண்டிருந்த சபை சிதறடிக்கப்பட்டது.

தமஸ்கு நகரத்தில் கிறிஸ்தவம் வளர்ந்து கொண்டிருப்பதை சவுல் அறிந்தார். அவர்களை அழிப்பதற்கான அனுமதியை எருசலேம் பிரதான ஆசாரியர்களிடம் சென்று கேட்டார். அவர்கள் உடனடியாக அனுமதி கொடுத்து அவரை அனுப்பி வைத்தனர்.

சவுல் தன்னுடைய குதிரையில் ஏறி தமஸ்கு நகரை நோக்கி விரைந்தார். கிறிஸ்தவர்களைக் கொல்ல வேண்டும் என வெறியுடன், படையுடன் அவர் புறப்பட்டார்.

போகும் வழியில் திடீரென்று வானத்திலிருந்து தோன்றிய ஒரு ஒளி சவுலைச் சுற்றி வீசியது! சவுல் குதிரையிலிருந்து கீழே விழுந்தார். உடன் வந்து கொண்டிருந்தவர்கள் எல்லோரும் இந்தக் காட்சியைக் கண்டு உறைந்து போய் நின்றார்கள்.

‘சவுலே... சவுலே... ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?’ குரல் ஒன்று ஒலித்தது. எல்லோரும் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். யாரும் இல்லை. சத்தம் மட்டும் கேட்கிறது. அவர்கள் பயத்துடன் செய்வதறியாமல் திகைத்து நிற்க, சவுல் குரலை நோக்கிக் கேள்வி எழுப்பினார்.

‘ஆண்டவரே நீர் யார்?... நான் உம்மை எப்போது துன்புறுத்தினேன்..’

‘நீ துன்புறுத்தும் இயேசு தான் நான்’ சவுல் இந்தக் குரலைக் கேட்டதும் நடுங்கினார். இயேசு தான் உண்மையான தேவன் என்பதை அவருடைய மனம் எப்போதும் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.

‘நீ எழுந்து நகருக்குப் போ... நீ என்ன செய்யவேண்டும் என்பதை அங்கே நான் உனக்குச் சொல்வேன்’ குரல் ஒலிக்க சவுல் எழுந்தார். சுற்றுமுற்றும் பார்த்தார் எங்கும் ஒரே இருள்! அவருடைய பார்வை பறிபோய் இருந்தது!

மூன்று நாட்கள் சவுல் பார்வையில்லாமல் இருந்தார். அவர் அந்த மூன்று நாட்களும் உண்ணவும் இல்லை குடிக்கவும் இல்லை. நான் துன்புறுத்தும் இயேசு தான் உண்மையிலேயே தேவனா? நான் இப்போது என்ன செய்வது? சவுல் கேள்விகளுக்குள் புதைந்து கிடந்தார்.



பார்வை இருந்தபோது குருடனாய் இருந்த

சவுல், பார்வை போனபின் புதுப் பார்வை பெற்றார். இயேசுவை நோக்கி மன்றாடத் துவங்கினார்.



‘ஆண்டவரே... நீர் உண்மையான தேவனாய் இருந்தால் என்னுடைய பார்வை எனக்குத் திரும்ப வரட்டும்’ சவுல் மனதால் வேண்டினான்.

‘அனனியா என்றொரு மனிதனை நான் அனுப்புகிறேன். அவன் உன்னுடைய பார்வையைத் திரும்பத் தருவார்’ சவுலின் மனதுக்குள் தேவன் பேசினார். அனனியாவிடமும் தேவன் பேச அவர் சவுலைத் தேடி ஓடினார்.

சவுலைக் கண்டு பிடித்து அவருடைய கண்களின் மேல் கைகளை வைத்து ஜெபித்தார் அனனியா. அப்போது அவருடைய கண்களிலிருந்து செதிள் போன்ற ஒரு பொருள் கழன்று விழ அவர் பார்வையடைந்தார்.

அதன் பின் சவுல் தாமதிக்கவில்லை. தன்னுடைய பழைய எண்ணங்களையெல்லாம் மாற்றிக் கொண்டார். விரைந்து சென்று ஞானஸ்நானம் பெற்றார். கொண்டு வந்திருந்த ஆணைகளைக் கிழித்து எறிந்தார்.

எந்த அளவுக்கு இயேசுவுக்கு எதிராய் செயல்பட்டாரோ, அந்த அளவுக்கு ஆதரவாய் செயல்பட ஆரம்பித்தார்!

தன்னுடைய பெயரையும் பவுல் என்று மாற்றிக் கொண்டார்.

நகரெங்கும் சென்று கிறிஸ்துவை அறிக்கையிடத் துவங்கினார்.

கிறிஸ்துவை அடியோடு வெறுத்த ஒருவர் அவரைப் பற்றி சாட்சி சொல்லித் திரிவதைக் கேட்ட பலர் இயேசுவில் விசுவாசம் கொண்டார்கள்.

பவுல் தமஸ்கு நகரில் தன்னுடைய போதனையை தீவிரப்படுத்தினார். யூதர்கள் பவுலின் மனமாற்றத்தைக் கண்டு எரிச்சலடைந்தார்கள். எப்படியாவது பவுலைக் கொல்லவேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டார்கள். பவுல் எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சவில்லை. இயேசுவின் வல்லமையை பெற்று பல்வேறு நகர்களுக்கும், துறைமுகப் பட்டணங்களுக்கும் சென்று இயேசுதான் கிறிஸ்து என்று போதிக்கத் துவங்கினார்.

இவ்வாறு மிகவும் எழுச்சியுடன் பணியாற்றிய பவுல் பல்வேறு வகையில் துன்புறுத்தப்பட்டார். கடைசியில் கி.பி 64ம் ஆண்டு நீரோ மன்னனால் சிரச்சேதம் செய்யப்பட்டு மரணமடைந்தார்!

கிறிஸ்தவத்தின் வேர்களில் கோடரி வைக்க நினைத்த பவுலை இயேசு கிறிஸ்தவத்தின் ஆணிவேராக மாற்றினார். இன்றைய பைபிளில் இருக்கும் புதிய ஏற்பாடு நூல்களில் பதிமூன்று நூல்களை தூய ஆவியின் ஏவுதலால் பவுல் எழுதியிருக்கிறார். திருச்சபைகளுக்கு அவர் எழுதிய கடிதங்களே அவை. அவை தான் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளமாக இன்றைக்கு அமைந்திருக்கின்றன.

அழைத்தலுக்கு செவிமடுப்பவர்களை தேவன் அற்புதமாகப் பயன்படுத்துவார் என்பதன் விளக்கமாக இருக்கிறது அப்போஸ்தலர் பவுலின் வாழ்க்கை.

# வேதாகம கதாநாயகர்கள்

**படங்களைப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை பொருத்துக:**









**யோவான்ஸ்நானன்** (மத்தேயு)

**மரியாள்** (மத்தேயு)

**யோசேப்பு** (ஆதியாகமம்)

**சவுல்** (1 சாமுவேல்)

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

Elim ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்



Join Us For

# வார நாட்களில்
## சபையில் நடைபெறும்
# மாலை நேர கூட்டங்கள்



**அதிகாலையில் ஆராதனை**
**தினந்தோறும்**
காலை 5.00 மணிமுதல்
காலை 6.00 மணிவரை



**குடும்ப ஆசீர்வாத ஜெபம்**
**தினந்தோறும்**
காலை 10.00 மணிமுதல்
மதியம் 12.00 மணிவரை



**மன்றாட்டு ஜெபம்**
**திங்கட்கிழமைதோறும்**
மாலை 6.30 மணிமுதல்
இரவு 8.30 மணிவரை



**இஸ்ரவேலுக்கான ஜெபம்**
**செவ்வாய்க்கிழமைதோறும்**
மாலை 6.30 மணிமுதல்
இரவு 8.30 மணிவரை



**வேதாகம வகுப்பு**
**புதன்கிழமைதோறும்**
மாலை 6.30 மணிமுதல்
இரவு 8.30 மணிவரை



**சுகமளிக்கும் ஆராதனை**
**வியாழக்கிழமைதோறும்**
மாலை 6.30 மணிமுதல்
இரவு 8.30 மணிவரை



**விடுதலையின் ஆராதனை**
**வெள்ளிக்கிழமைதோறும்**
மாலை 6.30 மணிமுதல்
இரவு 8.30 மணிவரை



**காத்திருப்பு ஜெபம்**
**சனிக்கிழமைதோறும்**
மாலை 6.30 மணிமுதல்
இரவு 8.30 மணிவரை

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600024
**தொடர்புக்கு : 9884908777, 9003067777**



Date of Publication on Last Week of Previous Month
REGISTRAR OF NEWSPAPER FOR INDIA
TNTAM/2006/17835
Posted on 19th & 20th at RMS/1
Patrica Channel, Egmore, Ch - 8.

சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். யோவேல் 2:15

அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்கள் நடத்தும்

# 74TH திருப்பத்தூர் பரிசுத்த உபவாச முகாம்

செப்டம்பர் 4,5,6

வியாழன் & வெள்ளி 5 AM - 9 PM
சனி 5 AM - 1 PM

FASTING PRAYER CAMP



BRO. VINCENT RAJ | BRO. EBINEZER PAUL | BRO. VINCENT SELVAKUMAR | PAS. OSBORNE JEBADURAI | PAS. L JOSEPH

FASTING PRAYER CAMP

பதிவு கட்டணம் ₹200

இடம்:
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
சகோ. சாம் ஜெபத்துரை நினைவு மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம் வேலூர் அருகில்
தொடர்புக்கு: 9884916777, 9003067777, 9884908777

SCAN HERE

If undelivered please return to:

**Elim Glorious Revival Church**
#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com